முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 05.03.2026.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 06/2024**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 05ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | குப்பன் | வயது | : | 65 |
| ஊர் | : | மாமண்டூர் | தொழில் | : | விவசாயம் |

**வா.சா. 1 (ராஜேந்திரன்): பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. என் அப்பாவிற்கு 12 வாரிசுகள் ஆவார்கள். அதில் 5 பேர் இறந்துவிட்டார்கள். தற்போது 7 பேர் உள்ளார்கள். நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 450/5பி. வழக்கு சொத்தில் சர்வே எண் 450/5ல் 8 செண்ட் நிலத்தினை துரைசாமி என்பவரிடம் என் தந்தை கிரயம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அசல் பிரதிவாதியின் வசம் உள்ளது. அதனால் நான் மேற்படி ஆவணத்தின் நகலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணமானது வா.சா.ஆ.1 ஆகும். அதன்படி மேற்படி சொத்தானது புலத்தில் 3 ஏர்ஸ் மட்டும் கொண்டுள்ளது என்றால் ஆளுக்கு 4 செண்ட் உள்ளது. நான் பொய் சொல்கிறேன் என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தில் 3 ஏர்ஸ் மட்டும்தான் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது என்றும் சொன்னால் மேற்படி ஆவணமானது பழைய ஆவணமாகும். என் தந்தைதான் அதை கிரயமக் பெற்றார். என் தந்தை இறந்து 40 வருடங்கள் ஆகிறது.

2. வா.சா.ஆ.2 ஆவணமானது 07.01.2024ல்தான் கணினியில் மூலம் பெறப்பட்டது. அதனால் நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. வருவாய்த்துறை ஆவணங்களில் உள்ள அளவுகளில் மட்டும்தான் நான் பிரித்துக்கொள்ளமுடியும் என்றும் அதற்கு மிகுதியாக பிரித்துக்கொள்ள முடியாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி சர்வே எண்ணில் 3 ஏர்ஸ் மட்டும்தான் குறிப்பிட்டுள்ளது என்றும் அது தவறாக குறிப்பிட்டிருந்ததால் நான் திருத்தம் செய்வதற்கு மனு அளித்திருப்பேன் என்று சொன்னால் திருத்தம் செய்வதற்கு மனு தாவா தாக்கல் செய்வதற்கு முன்னரே நானும் எனது வழக்கறிஞரும் மனு அளித்திருந்தோம். மேற்படி மனுவினை மணியக்காரர் மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்தேன். மேற்படி அவர்கள் என்னை கூப்பிட்டு விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். மேற்படி விசாரணையில் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ உள்ளது என்பதனை உத்தரவு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

3. மேற்படி 3 ஏர்ஸ் சொத்தைதான்நானும் பிரதிவாதியும் தனித்தனியாக பிரித்து அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். என்னுடைய 1 1/2 ஏர்ஸில் பழைய வீடு உள்ளது என்றால் சரிதான். அதேபோல் பிரதிவாதி அவரின் 1 1/2 ஏர்ஸில் பழைய வீடு இடித்து புதிய வீடு கட்டிக்கொண்டார் என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு பின்னாடி ஒட்டியவாறு 4 அடி கால்வாய் செல்கிறது என்றால் சரிதான். நான் 4 அடி என்று சொல்வது பொய் என்றும் அது 11 அடி கால்வாய் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் பிரதிவாதியின் 1 1/2 ஏர்சின் தெற்கு பக்கம் எத்தனை அடி கால்வாய் செல்கிறது என்றால் 4 அடி ஆகும். மேற்படி பிரதிவாதி 1 1/2 ஏர்சின் தெற்கு பக்கத்தில் கால்வாயை ஒட்டி சீட்

போட்ட வீடு கட்டியுள்ளாரா என்றால் அதை இடித்து அவர் மெத்தை வீடு கட்டியுள்ளார். எங்கள் இருவருக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்டதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அது கூர் சீட்டு ஆகும். மேற்படி எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மற்ற வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

4. என்னுடைய தாவாவில் வழக்கு சொத்தில் 4 சென்ட் கொண்டது என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றும் 3 3/4 சென்ட்டுதான் கொண்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்திருக்கும் 23.05.1978 தேதியிட்ட என்தந்தை கிரயம் பெற்ற ஆவணத்தின் படி 3 ஏர்ஸ்தான் குறிப்பிட்டு கிரயம் பெற்றார் என்றால் சரிதான். அதில் 7 சென்ட் என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 8 சென்ட் என்று தவறுதலாக குறிப்பிட்டு கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. எனது தந்தை கிரயம் பெற்ற சொத்திற்கு மேற்கு பக்கம் மற்றும் தெற்கு பக்கத்தில் மாமண்டூர் ஏரிக்காலவ்வாய் உள்ளது என்றாலும் வடக்கு பக்கம் சந்திரன் என்பவர் சொத்து உள்ளது என்றாலும் காஞ்சிபுரம் வந்தவாசி ரோடுக்கு மேற்கு இதில் இடையில் உள்ள சொத்துதான் வா.சா.ஆ.2ல் குறிப்பிட்டுள்ள சொத்து ஆகும் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் 3 ஏர்சில் 3 பக்கமும் ஏரிக்கால்வாய்தான் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் என் அப்பா கிரயம் பெற்ற சொத்திற்கு ஏரிக்கால்வாய்க்கு கிழக்கு பக்கத்திற்கு கிழக்கு பக்கம் காஞ்சிபுரம் வந்தவாசி சாலை உள்ளது என்றால் சரிதான்.

5. என் வீட்டிற்கு நான்தனியாக வரி ரசீது கட்டி வருகிறேன் என்றும் அதேபோல் பிரதிவாதியும் அவர் தனியாக வரி ரசீது கட்டி வருகிறார் என்றால் சரிதான். அதேபோல் வழக்கு சொத்தில் வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான் நான் தனியாக அனுபவித்து வந்திருந்தேன் என்றால் தனிப்பட்டாவாக மாற்றியிருப்பேன் என்றால் சரிதான். தனிப்பட்டாவாக மாறவில்லை. மேற்படி வழக்கு சொத்தானது கூட்டு பட்டாவாக உள்ளதனால் நான்கேட்கும் விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி எனக்கு பாகமாக கிடைக்கப்பெற்ற சொத்துதான் வழக்கு சொத்து என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதினால் என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் என்னுடைய 3 3/4 சென்ட்டிலும் வீடு கட்டியுள்ளேன். அதபோல் அவருடைய 3 3/4 சென்ட்டில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதில் சர்வேயர் கல்லினை பிரதிவாதி எடுத்துவிட்டு 6 அடி வந்துள்ளார். நான் சொல்வது பொய் என்றும் அவ்வாறு பிரதிவாதி 6 அடியினை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும் அதில் ஏரிக்கால்வாய் என்று தெரிந்த உடன் எடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

6. மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையர் வந்து சொத்தனை அளந்தார் என்றால் சரிதான். அப்போது நீதிமன்ற ஆணையர் புலத்தில் 3 3/4 சென்ட்தான் நிலம் உள்ளது என்றும் சர்வேயர் 4 சென்ட் வருகிறது என்றும் கூறினார் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் 4 சென்ட்டுதான் உள்ளது. நீதிமன்ற ஆணையர் நீதிமன்றம் கொடுத்த வழிகாட்டுதலை பின்பற்றாமல் வழக்கு சொத்தினை இருவருக்கும் பிரித்து அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மாமண்டூர் ஏரிக்கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பேரில் வருவாய்த்துறையினர் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக அறிவிப்பினை கொடுத்தார்களா என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தினை அளக்கும்போது புகைப்படம் எடுத்தாரா என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கானது பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றவேண்டும் என்பதற்கான வழக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தானது கூட்டு சொத்தாக உள்ளதனால் நான் கேட்கும் விளம்புகை பரிகாரம் என்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் பிரதிவாதி வீட்டிற்கு வடக்கு பக்கத்தில் 6 அடி விட்டுதான் வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் என்னுடைய 6 அடியை எடுத்துக்கொண்டுதான் வீடு கட்டியுள்ளார். என்னுடைய இடம் காலியாக உள்ளது. அதனால் என்னுடைய தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடிவடைகிறது.**

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.03.05 17:30:46 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு